## DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS 2023)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK

**CC.No.108/2024**

Deposition of Witness of PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : குமரவேல் | Calling | : |
| Father/Husband's Name | : | Age | : |
| Village | : | | : |
| Taluk | : | | : |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the day of 20th நவம்பர் 2025.

எதிரி ஆஜரில் உள்ளார்.

சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிவகிரி ராமநாதபுரத்தில் வசித்து கொண்டு சிகரம் அசோசியேட்ஸ் நிறுவனத்தில் பங்குதாரராக உள்ளேன். கடந்த 24.01.2022 ம் தேதி இரவு 7.30 மணிக்கு நாவிதன்காடு பக்கத்தில் நானும்எனது நண்பர் சரேஷ்ம் இருசக்கர வாகனத்தில் ஈரோட்டில் இருந்து சிவகிரி நோக்கி சென்று கொண்டிருந்த போது எனக்கு முன்னால் எங்கள் ஊரை சேர்ந்த ஜெகதீஸ் என்ற நண்பர் யுனிகான் இருசக்கர வாகனத்தில் சிவகிரி நோக்கி சென்று கொண்டிருந்தார். அவருக்கு முன்னால் மற்றொரு இருசக்கர வாகனம் சென்று கொண்டிருந்தது.

2. எதிரே வெள்ளை கலர் அப்பாச்சி பைக்கில் 3 நபர்கள் ஒரே பைக்கில் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இடதுபுறமாக பைக்கில் வராமல் வலதுபுறமாக ஏறி வந்து ஜெகதீசுக்கு முன்னால் சென்று சகொண்டிருந்த பைக்கின் மீது மோதி அதற்கு பின்னால் வந்த ஜெகதீஸ் வண்டி மீது மோதி விபத்தை ஏற்பட்டது. அந்த விபத்தை 30 மீட்டர் துாரத்தில் இருந்து பார்த்தோம். உடனே வந்து பார்த்த போது ஜெகதீசுக்கு காலில் அடிபட்டிருந்தது. மற்றொரு நபருக்கு என்ன அடி என்ற நான் பார்க்கவில்லை. 3 நபர்கள் வந்த பைக்கில் இருந்த 2 நபருக்கு தலையில் அடிபட்டது. அங்கு இருந்தவர்கள் 108

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.20 17:58:56 +0530

ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி அடிபட்ட 2 பேரையும் அனுப்பிவைத்தார்கள். அதே வாகனத்தில் ஜெகதீசும் மருத்துவமனைக்கு சென்றார். நான் ஊருக்கு சென்றுவிட்டேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரி தான் பைக்கை ஓட்டி வந்த 2 பைக்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்திய நபர் ஆவார். மறுநாள் காலையில் போலீஸார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள்.

**எதிரிதரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்ததாக சொல்லும் ரோடு ஒரு வழி சாலை என்றால் சரிதான். விபத்து நடந்ததாக சொல்லும் இடத்தில் மின்விளக்கு வெளிச்சம் எதுவும் கிடையாது என்றால் சரிதான். வாகனம் ஓட்டி வந்த நபர் யார் என்றும், எதிரே வந்த நபர் யார் என்று விபத்து ஏற்பட்ட சமயத்தில் பார்க்க முடியாது என்றால் சரிதான். விபத்து யாரால் ஏற்பட்டது என்று என்னால் குறிப்பிட்டு கூறமுடியாது என்றால் 3 நபர்கள் வந்த பைக் வெளிச்சம் எனக்கு தெரிந்தது, விபத்து ஏற்பட்டு பார்த்த போது அது மேற்படி நபர்கள் வந்தது என்று உறுதியானது. விபத்து ஏற்படுவதற்கு முன்பு லாரி சென்றதது என்றால் அது லாரியா டெம்போவா என்று தெரியவில்லை, ஒரு நான்கு சக்கர வாகனம் சென்றதது.

2. ஜெகதீஸ் எனது அக்கா மகன் என்றால் சரிதான். என்னுடன் வந்த சுரேஷ்குமாருக்கும் ஜெகதீஸ் உறவினர் என்றால் இல்லை. மின் விளக்கு இல்லாததால் விபத்தை நேரடியாக பார்க்க வாய்ப்பில்லை என்றால் இருசக்கர வாகன வெளிச்சத்தில் ஒரு வாகனம் வந்ததை பார்த்தேன், அப்போது விபத்து ஏற்பட்டது. நான் பக்கம் போனேன். அது மேற்படி சம்பந்தப்பட்ட வாகனங்கள் என்று தெரிந்தது. விபத்து நடந்ததாக சொல்லும் சாலை ஒரு வழி சாலையில் முன்னேறி கடக்க வேண்டும் என்றால் வலதுபக்கம் தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். விபத்துக்கு ஜெகதீஸ் தான் காரணம் என்றால் சரியல்ல. எதிரே வந்த வாகனத்தை கவனிக்கவில்லை என்றால் சரியல்ல.

3. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றும், எனது அக்கா மகன் ஜெகதீஸ் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெகதீஸ் தன்னுடைய பாதையில் தான் சென்று கொண்டிருந்தார். விபத்து அவரது அஜராக்கிரதை காரணமில்லை. வளைவு பகுதியில் விபத்து நடந்தது என்றால் சிறிய அளவிலான வளைவு தான் உள்ளது அது நேர் ரோடு தான். ஜெகதீசுக்கு விபத்து ஏற்பட்ட போது சிறிய காயங்களுடன் தான் இருந்தார்.

VIJAYAKUMAR K
Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.20 17:59:00 +0530

ஆஜர் எதிரியுடன் வந்தவர்களில் இருவருக்கு தான் பலத்த அடிபட்ட கீழே கிடந்தார் என்றால் சரிதான். ஆஜர் எதிரி வாகனத்தை ஓட்டவில்லை என்றும், ஆஜர் எதிரியின் சகோதரர் தான் வாகனத்தை ஓட்டினார் என்றால் எதிரி தான் ஓட்டி வந்ததாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள்.

4. நான் சொன்ன நேரத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றும், காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோன நவீன்குமாருக்க உடல்நிலை சரியில்லாமல் மொடக்குறிச்சி மருத்துவமனைக்கு செல்வதாக சொன்னார் என்றால் அதுபற்றி தெரியாது.

**மறு விசாரணை இல்லை.**

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.11.20 17:59:06 +0530